செய்தி வெளியீடு எண்: 624 நாள் : 05.12.2015

## பத்திரிகைச் செய்தி

சென்னையில் பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் 7–வது வார்டுக்கு உட்பட்ட கார்கில் நகர் மற்றும் ராஜாஜி நகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ள நிவாரணப் பணிகளை பார்வையிட்ட மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திருவொற்றியூர், பெரியார் நகர், வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க போர்வை, பாய் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார்.

இம்முகாமில் தங்கியுள்ள மக்களிடம் காலை உணவு, குடிநீர், வழங்கப்பட்டது குறித்து கேட்டறிந்தார். அதற்கு அம்முகாமில் தங்கியிருந்த மக்கள் தங்களுக்கு உணவு, குடிநீர் உட்பட அனைத்து பொருட்களும் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறதென தெரிவித்தனர்.

தொடர்ந்து, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையின் சார்பில் அமைக்கப்பட்ட வெள்ள நிவாரண சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்த மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அம்முகாமில் இருந்த மருத்துவர்களிடம் பொது மக்களுக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை வழங்கி, சிறப்பான மருத்துவ சிகிச்சை அளித்திட, அறிவுரைகள் வழங்கினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கார்கில் நகர் மற்றும் ராஜாஜி நகர் பகுதி மக்கள் சுமார் 4000–க்கும் மேற்பட்டோர் பெரியார் நகர், வெள்ளையன்செட்டியார் மேல்நிலைப் பள்ளியிலும், ராமர் தெரு, விக்டோரியா பள்ளியிலும், தேரடி வீதி, கௌரி

ஆசிரமம் திருமண மண்டபத்திலும், கங்கா ஜெயராம் திருமண மண்டபத்திலும் தங்க வைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், உள்ளிட்ட அனைத்து பொருட்களும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து பிற்பகலில், திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சத்தியமூர்த்தி நகர், கலைஞர் நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து, ரொட்டி, குடிநீர், பால், உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, மணலி புதூருக்கு அருகே உள்ள சடையன்குப்பம் தாழ்வான பகுதியில் பூண்டி, சோழவரம் ஏரிகளிலிருந்து வருகிற வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்பகுதிக்கு 2 கி.மீ. தூரம் படகில் சென்று, அங்கு தங்கியுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்கு ரொட்டி, குடிநீர், பால், உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.குப்பன், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.மாதவரம் பி.மூர்த்தி ஆகியோரும் உடனிருந்தனர்.

---

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**